3

# கிறிஸ்து, நமது பிரதான ஆசாரியர்

## (4:14–16; 5:1–10; 7:1–28; 8:1, 2)

மக்களைத் தேவனிடத்தில் கொண்டுவருதல் அல்லது நம்மைத் தேவனிடத்திற்குத் திரும்பக் கொண்டுவருதல் என்பதே பெரும்பான்மையான மார்க்கங்களின் பணியாக உள்ளது. இந்த நோக்கத்திற்காக, பல மார்க்கக் குழுக்கள், மத்தியஸ்தராகப் பணிசெய்தல், நமக்கும் தெய்வீகத்திற்கும் இடையில் நிற்றல், தேவனிடத்தில் வருவதில் நமக்கு உதவுதல் என்ற பணியைக் கொண்டுள்ள பிரதான ஆசாரியத்துவத்தின் ஏதோ ஒரு வகையைக் கொண்டுள்ளன. கிறிஸ்தவத்தில் நாம் - இயேசு கிறிஸ்து என்ற - பிரதான ஆசாரியரைக் கொண்டிருக்கிறோம் என்று எபிரெயருக்கு எழுதிய நிருபம் கூறுகிறது!

உண்மையில், கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவம் என்பதே இந்தப் புத்தகத்தின் முதன்மைத் தலைப்பாக உள்ளது. வேதாகமத்தின் ஒரு புத்தகத்தை நாம் வாசிக்கும்போது, அது எதைப் பற்றியது என்று நாம் அடிக்கடி வியப்படைகிறோம். எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் விஷயத்தில், நாம் ஆச்சரியப்படும்படி விட்டுவிடப் படுவதில்லை. எபிரெயர் 8:1, 2ஆ வில் இதை எழுதியவர் பின்வருமாறு கூறினார்:

> மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில். பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், … இருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு.

எழுத்தாளர் செயல்விளைவில், “இப்படிப்பட்ட பிரதான ஆசாரியர் ஒருவர் நமக்கு இருக்கிறார் என்பதே நான் உங்களுக்குப் போதிக்க முயற்சி செய்துள்ள முதன்மை விஷயமாக உள்ளது” என்று கூறினார். இவ்வசனத்தில் இருந்து நாம், விழுந்துபோவதில் இருந்து மக்களைக் காத்துக்கொள்ளுதல் என்பது இப்புத்தகத்தின் நோக்கமாக இருக்கையில், கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவம் என்பதே முதன்மைப் பாடக்கருத்தாக உள்ளது என்று தைரியமாகக் கூறலாம்.[1]

இந்தப் புத்தகம் போதிப்பது என்ன, மற்றும் இது அதிகாரங்கள் 5 மற்றும் 7ல் நமது பிரதான ஆசாரியர் என்ற வகையில் கிறிஸ்துவைப் பற்றிப் போதிப்பது என்ன என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க நாம் விரும்புகிறோம். மேலும் நாம், “நமது பிரதான ஆசாரியரான கிறிஸ்துவின் பண்புகள் ஒவ்வொன்றும் நம்மீது கொண்டுள்ள செயல்தாக்கம் என்ன?” என்றும் கேட்போம்.

## கிறிஸ்து நமக்காகப் பரிதபிக்கிறார்

*முதலாவது நாம், நமது பிரதான ஆசாரியரான கிறிஸ்து, நமது பலவீனங்களுக்காகப் பரிதபிக்க முடியும் என்று கற்றறிகிறோம். (4:14-16ஐ வாசிக்கவும்.) ஏன்? ஏனென்றால் அவர், "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்படும், பாவமில்லாவராயிருக்கிறார்." மனிதராக இருத்தல் எதைப் போன்றுள்ளது என்று அவர் அறிந்திருக்கிறார், எனவே அவர் நம்மைக் குறித்துப் பரிதபிக்க முடியும் (மேலும் காண்க 2:17, 18).*

*இயேசுவின் ஆசாரியத்துவம் பற்றிய இந்தப் பண்புகள் நம்மீது எவ்வாறு செயல்விளைவை ஏற்படுத்த வேண்டும்? இப்படிப்பட்ட ஒரு பிரதான ஆசாரியரைக் கொண்டுள்ள நாம், நமது விசுவாசத்தைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும் (4:14). இத்துடன் கூடுதலாக நாம், தைரியமாகக் கிருபாசனத்தை அணுக வேண்டும் (4:16).*

## கிறிஸ்து தேவனால் ஆசாரியராக நியமிக்கப்பட்டார்

*இரண்டாவது நாம், லேவியத்துவ ஆசாரியர்களைப் போலவே கிறிஸ்து தேவனால் ஆசாரியராக நியமிக்கப்பட்டார் என்பதைக் கற்றறிய வேண்டும். (5:1-11ஐ வாசிக்கவும்.)*

*இந்த வசனப் பகுதியில் நாம், மோசேயின் பிரமாணத்தின்கீழ் ஆசாரியர்களைப் பற்றிக் கற்றறிகிறோம். 5:1-4ன் படி அவர்கள், (1) மனிதர்களுக்காக ஊழியம் செய்தனர், (2) பலிகள் செலுத்தினர், (3) அவர்கள் தாங்களே பலவீனத்திற்கு உட்படக் கூடியவர்களாக இருந்ததால், "ஒன்றும் அறியாதவர்கள் மற்றும் தவறாக வழிநடத்தப் பட்டவர்களை" மென்மையாக கையாண்டனர், (4) தங்கள் சொந்த பாவங்களுக்காகப் பலிகள் செலுத்தினர் மற்றும் (5) தேவனால் நியமிக்கப் பட்டனர். நமது பிரதான ஆசாரியர் என்ற வகையில் இயேசு, இந்த ஆசாரியர்களைப் போல் இருக்கிறார், அவர் (1) மனிதர்களுக்காக ஊழியம் செய்கிறார், (2) ஒரு பலியை செலுத்தினார், (3) நம்மைப் போலவே அவரும் சோதிக்கப் பட்டதால், பாவிகளை அவர் மென்மையாகக் கையாளக் கூடியவராக இருந்தார் மற்றும், (4) தேவனால் நியமிக்கப்பட்டார். அவர் பாவமில்லாதவராக இருந்ததால், லேவியத்துவ ஆசாரியர்களைப் போல், தமது பாவங்களினிமித்தம் பலி செலுத்த வேண்டியவராக இருக்கவில்லை (4:15).*

*இருப்பினும் இயேசு, தேவனால் ஆசாரியராக நியமிக்கப்பட்டார் என்பதே 5:1-11ன் முதன்மை வலியுறுத்தமாக உள்ளது. அந்தக் கருத்தை நிரூபிக்க, 5 முதல் 7 வரை உள்ள வசனங்களில், எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இரண்டு வசனப்பகுதிகளை (சங்கீதம் 2; 110) பயன்படுத்தினார். இத்துடன் கூடுதலாக, இவ்வசனப் பகுதியின்படி, இயேசு - தேவனுடைய குமாரனாக இருந்தும் - "பட்ட பாடுகளினாலே" கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டதன் மூலம் தமது ஆசாரியத்துவத்திற்குத் தகுதியானார். மரணபரியந்தம் கீழ்ப்படிதல் உள்ளவராக இருத்தல் என்பது, அவர் நமது பிரதான ஆசாரியராக இருத்தலைச் சாத்தியமாக்கிற்று. இவ்வாறு அவர் "தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும்" இரட்சகரானார் (5:8, 9).*

# மெல்கிசேதேக்கின் முறைமைப்படி கிறிஸ்து ஆசாரியராக இருக்கிறார்

மூன்றாவது நாம், மெல்கிசேதேக்கின் முறைமைப்படி கிறிஸ்து ஆசாரியராக இருக்கிறார் என்பதைக் கற்றறிகிறோம் (5:10). எழுத்தாளர், மெல்கிசேதேக்கைக் குறிப்பிட்ட பின்பு, "பூரணராகும்படி கடந்துபோவதற்கு" தமது வாசகர்களுக்குப் புத்திமதி ஒன்றை உட்செருகினார் (6:1). பின்பு 5ம் அதிகாரத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மெல்கிசேதேக் பற்றிய பாடக்கருத்திற்கு, 7ம் அதிகாரத்தில் அவர் திரும்பச் சென்றார். (7:1-25ஐ வாசிக்கவும்.) வழக்கத்திற்கு மாறான இந்த ஆசாரியரைப் பற்றி நாம் சற்றே ஆராய்ச்சி செய்வோமாக.

**மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தினுடைய பண்புகள்**

எபிரெயர் 7ல் நாம், மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் பற்றிய சில உண்மைகளைக் கற்றறிகிறோம். கிறிஸ்து நியமிக்கப்பட்ட இந்த ஆசாரிய முறைமைத்துவம் லேவித்துவ ஆசாரிய முறைமையில் இருந்து எவ்வாறு வேறுபட்டிருந்தது?

*நிரந்தமான ஆசாரியத்துவம்.* எபிரெயர் 7ம் அதிகாரம், பழைய ஏற்பாட்டில் இருந்து நாம், மெல்கிசேதேக்கைப பற்றி அறிந்துள்ள யாவற்றையும் மீண்டும் எண்ணுவதைக் கொண்டு தொடங்குகிறது (காண்க ஆதியாகமம் 14:17-20).

வேதாகமப் பதிவேட்டில், மெல்கிசேதேக்கு திடீரெனத் தோன்றுவதாலும் அவரது வம்சவழி அல்லது அவரது பிறப்பு அல்லது இறப்பு ஆகியவற்றைப் பற்றி ஒன்றும் கூறப்படாதிருப்பதாலும், அவர் "ஒரு நித்திய ஆசாரியராக நிலைத்திருக்கிறார்" என்பது, எழுத்தாளர் ஏற்படுத்திய ஒரு கருத்தாக உள்ளது (7:3). அவ்வாறே, லேவியத்துவ ஆசாரியர்களுக்கு நேர்மாறாக, இயேசு "தமது ஆசாரியத்துவத்தை நிரந்தரமாகப் பற்றிக்கொள்கிறார்" (7:23, 24).

*மேன்மையான ஆசாரியத்துவம்.* மேலும் எழுத்தாளர், மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்த லேவியத்துவ ஆசாரியத்துவத்தைப் பார்க்கிலும் கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மேன்மையானதாக இருக்கிறது என்பதை நிரூபிக்க மெல்கிசேதேக்கைப் பயன்படுத்தினார். மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் தசமபாகம் செலுத்தினார் என்பதை அவர் குறிப்பிட்டார் (7:4). இஸ்ரவேல் மக்கள், ஆபிரகாமின் வம்சவழியில் வந்த லேவியத்துவ ஆசாரியர்களுக்குத் தசம பாகம் செலுத்தினர். ஆபிரகாமின் வம்சவழியில் வந்தவர்களான, தசமபாகம் பெற்றுக்கொண்ட லேவியத்துவ ஆசாரியர்களே, (தங்கள் தகப்பனாகிய ஆபிரகாம் மூலமாக) மெல்கிசேதேக்குக்குத் தசமபாகம் செலுத்தினர் என்ற உண்மையானது, அவர்களைக் காட்டிலும் மெல்கிசேதேக்கு பெரியவராக இருந்தார் என்று நிரூபிக்கிறது (7:4-10). இந்த ஒப்புவமையில் இருந்து நாம், லேவியத்துவ ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் பெரிதாக உள்ளது என்று முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

*மாறுபட்ட ஆசாரியத்துவம்.* மெல்கிசேதேக்கின் முறைமையின்படி வரவிருந்த இன்னொரு ஆசாரியரைப் பற்றித் தாவீதின் முன்னுரைத்தல், நியாயப்பிரமாணத்தின் பலவீனத்தைச் சுட்டிக்காட்டியதாக, 7:11ல் எழுத்தாளர் காண்பித்தார். நியாயப்பிரமாணம் பழுதற்றதாக இருந்திருக்கும் என்றால்,

மெல்கிசேதேக்கின் முறைமைப்படி இன்னொரு ஆசாரியர் வரத் தேவை இருந்திருக்காதே.

இதன் விளைவாக, லேவியத்துவ ஆசாரியத்துவத்தில் இருந்து கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் வேறுபட்டுள்ளது. கிறிஸ்து வேறு ஒரு கோத்திரத்தில் பிறந்தார் (7:13, 14); அவர் ''மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல், ... அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்'' (7:16, 17). லேவியத்துவ ஆசாரியர்களைப் போலின்றி, இவர் ஆணை அளிக்கப்பட்டதினால் ஆசாரியராக்கப்பட்டார் (7:20, 21).

*தனித்துவமான ஆசாரியத்துவம்* மேலும் இயேசுவின் ஆசாரியத்துவம் தனித்துவமானதாக உள்ளது. பழைய உடன்படிக்கையின் கீழ் பிரதான ஆசாரியர்கள் "மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்" (7:23), ஆனால் புதிய உடன்படிக்கையின்கீழ் இயேசு ஒருவரே பிரதான ஆசாரியராக இருக்கிறார்.

**கிறிஸ்துவின் மேன்மையான ஆசாரியத்துவத்தின் விளைவுகள்**

லேவியின் முறைமையின்படி என்பதற்கு மாறாக, மெல்கிசேதேக்கின் முறைமையின்படி கிறிஸ்து பிரதான ஆசாரியரானார் என்ற உண்மையின் விளைவுகள் என்னவாக உள்ளன? கிறிஸ்துவின் மேன்மையான ஆசாரியத்துவத்தின் இரண்டு விளைவுகளை எபிரெயர் 7ம் அதிகாரம் குறிப்பிடுகிறது.

*மேன்மையான உடன்படிக்கை.* எபிரெயர் 7ல் இதன் எழுத்தாளர், கிறிஸ்து நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்றும் அவரது ஆசாரியத்துவம் லேவியத்துவ ஆசாரியர்களின் ஆசாரியத்துவத்தில் இருந்து வேறுபட்டுள்ளது என்பதால் மோசேயின் நியாயப்பிரமாணம் நீக்கப்பட்டுள்ளது என்றும் பலமுறை உறுதிப்படுத்தினார். (1) ஆசாரியத்துவத்தில் ஒரு மாறுதல் உண்டாயிருக்கிறபடியால், பிரமாணத்திலும் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டும் (7:12). (2) ''முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது (ஏனெனில், நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை)'' (7:18, 19). (3) இயேசு, "விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்" (7:22). கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் நமக்கு அளிக்கிற மேன்மையான உடன்படிக்கைக்காகத் தேவனுக்கு நாம் நன்றி செலுத்துவோமாக!

*இரட்சிப்பு கிடைக்கும் தன்மை.* கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தினுடைய நிரந்தரத் தன்மை பற்றிப் பேசுகிற எபிரெயர் 7:25ம் வசனம், "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" என்று கூறுகிறது. கிறிஸ்து என்றென்றைக்கும் ஜீவனுள்ளவராக நமக்கு இரட்சிப்பை அருளுகிற பிரதான ஆசாரியராக இருக்கிறபடியால், நாம் எப்போதும் கிறிஸ்துவினிடம் வரமுடியும் என்பதற்காக நாம் தேவனைத் துதிப்போமாக!

## நமது பாவங்களுக்காகப் பூரணமான பலியைக் கிறிஸ்து செலுத்தினார்

நான்காவதாக நாம், கிறிஸ்து என்ற நமது பிரதான ஆசாரியர், நமது பாவங்களுக்காகப் பூரணமான பலியைச் செலுத்தியிருக்கிறார் என்று கற்றறிறோம். (7:26-28ஐ வாசிக்கவும்.) இவ்வசனப் பகுதியில் நாம், ஒருவேளை பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கு இடையில் உள்ள மிகவும் முக்கியமான வேறுபாடுகளைக் காணுகிறோம்: (1) பழைய உடன்படிக்கையின் ஆசாரியர்கள் பலவீனமானவர்களாகவும் பாவம் நிறைந்தவர்களாகவும் இருந்தனர் (5:2; 7:28), கிறிஸ்து, "பரிசுத்தரும், குற்ற மற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிறார்" (7:26) மற்றும் "என்றென்றைக்கும் பூரணராக" இருக்கும்படி ஏற்படுத்தப்பட்டார் (7:28). (2) லேவியத்துவ ஆசாரியர்கள் தங்களுக்காகப் பலிசெலுத்த வேண்டியவர்களாக இருந்த வேளையில் (5:3), கிறிஸ்து தமது பாவமற்ற தன்மையின் காரணமாக, அவ்வாறு பலிசெலுத்த அவசியம் இல்லாதிருந்தது. (3) பழைய உடன்படிக்கையின்கீழ் அன்றாடம் பலிகள் செலுத்த வேண்டியிருக்கையில், கிறிஸ்து ஒரே ஒரு பலியை செலுத்தினார் - இது "எல்லா (காலத்திற்கும்) ஒரேமுறை செலுத்தப்பட்ட" பலியாக இருந்தது. (4) லேவியத்துவ ஆசாரியர்கள் மிருகங்களைப் பலியாகச் செலுத்தினர், கிறிஸ்து தம்மையே பலியாகச் செலுத்தினார் (மேலும் காண்க 9:11-14; 9:28).

கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் பற்றிய இந்த உண்மைகள் நமக்கு அர்த்தப்படுத்துவது என்ன? அவைகள், பழைய பிரமாணத்தின் மூலம் கிடைக்காதிருந்த பாவ மன்னிப்பு, கிறிஸ்துவினுடைய பலியின் மூலமாக நமக்குக் கிடைக்கிறது என்று வெளிப்படுத்துகின்றன! நாம் நமது பாவங்களில் நிலைத்திருக்க அவசியம் இல்லை, ஏனெனில் நமது பிரதான ஆசாரியர் நமது பாவங்களை எடுத்துப் போடுவதற்காக தம்மைத்தாமே ஒரேதரம் பலிசெலுத்தியிருக்கிறார்!

## கிறிஸ்து இன்னமும் நமது பிரதான ஆசாரியராக ஊழியம் செய்கிறார்

ஐந்தாவதாக நாம், கிறிஸ்து நமது பிரதான ஆசாரியராக ஊழியத்தைத் தொடர்ந்து செய்கிறார் என்பதைக் கற்றறிகிறோம். (8:1, 2ஐ வாசியுங்கள்.) கிறிஸ்து நமது பிரதான ஆசாரியராக ஊழியத்தைத் தொடர்ந்து செய்கிறார் என்பதே இவ்வசனங்களில் வலியுறுத்தமாக உள்ளது. "தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிற இப்படிப்பட்ட ஒரு பிரதான ஆசாரியரை நாம் (இப்போது) கொண்டிருக்கிறோம்" மற்றும் இப்போது - அவர் பரலோக ஆலயத்தில் நமக்காக ஊழியம் செய்கிறார். *அவர் மூலமாக நாம் தேவனிடத்தில் சேரும் மார்க்கத்தைக் கொண்டிருக்கிறோம் என்பதே மறைகருத்தாக உள்ளது;* ஏனெனில் 7:25ம் வசனம் கூறுகிறபடி, நமக்காக "வேண்டுதல் செய்யும்படி அவர் எப்பொழுதும் உயிருள்ளவராக இருக்கிறார்."

## முடிவுரை

நாம் இப்பிரசங்கத்தை முடிக்கும் இவ்வேளையில், *பரலோகம் செல்வதற்கு நமக்கு உதவி தேவைப்படுகிறது என்பதை நினைவுகூருவோமாக!* நாமாகவே

*அதைச் செய்ய இயலாதபடிக்கு நாம் அவ்வளவு பலவீனமாக, அவ்வளவு பாவம் நிறைந்தவர்களாக இருக்கிறோம். நாம் நமது மகாப்பிரதான ஆசாரியரான இயேசு கிறிஸ்துவுக்குள் அவர் மூலமாக உதவியைக் கொண்டிருக்கிறோம் என்பது நற்செய்தியாக உள்ளது! அவர் நமது மத்தியஸ்தராக இருக்கிறார், மற்றும் அவர் நமக்காக "வேண்டுதல் செய்ய எப்பொழுதும் உயிருள்ள" நமது பரிந்துரைபேசுபவராக இருக்கிறார். ஆகையால் நாம், அவரது உதவியை தைரியமாக நாடுவோமாக மற்றும் அவர் செய்துள்ளவற்றின் காரணமாக நாம் தைரியமாகத் தேவனிடத்தில் அணுகமுடியும் என்பதை உணர்ந்தறிவோமாக.*

*கிறிஸ்து உங்கள் பிரதான ஆசாரியராக இருக்கிறாரா? நீங்கள் மனப்பூர்வமாக உங்களை அவரிடத்தில் இணைத்துக்கொள்ளாது இருந்தால், புதிய உடன்படிக்கையில் உங்களை வைக்காதிருந்தால், அவர் உங்கள் பிரதான ஆசாரியராக இருப்பதில்லை மற்றும் நீங்கள் பரலோகம் செல்வதற்குத் தேவையான உதவியை அவர் உங்களுக்கு அளிக்க இயலாது. அவர் உங்கள் பிரதான ஆசாரியர் ஆவதற்கு, நீங்கள் அவருடைய சித்தத்தைச் செய்வதன் மூலம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் (எபிரெயர் 5:8, 9). விசுவாசித்தல் (யோவான் 8:24), மனந்திரும்புதல் (லூக்கா 13:3), உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுதல் (மத்தேயு 10:32) மற்றும் ஞானஸ்நானம் பெறுதல் (மாற்கு 16:16; மத்தேயு 28:19, 20) என்ற அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யும்போது, கிறிஸ்துவின் பூரணமான பலியினால் நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள், கிறிஸ்து உங்கள் பிரதான ஆசாரியர் ஆவார், மற்றும் நீங்கள் பரலோகம் செல்வதற்கு அவர் உங்களுக்கு உதவுவார்!*

---

குறிப்பு

*[1]எபிரெயர் 8:1ல் கூறப்பட்டுள்ளது, அதற்குச் சற்று முன்னதாக 5 முதல் 7 வரையிலான அதிகாரங்களின் வசனப்பகுதியை விசேஷமாகக் குறிப்பிடுகிறது. இருப்பினும், இந்தப் புத்தகம் முழுவதிலும், கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தின் மீதான ஒரு வலியுறுத்தம் காணப்படுகிறது. உதாரணத்திற்கு, எபிரெயர் 1:3 (மறைமுகமாக உணர்த்தப்படுகிறது); 2:17; 3:1; 4:14, 15; 8:1-4; 9:11; 10:11, 12 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும்.*